சமுதாய நல வளர்ச்சித்துறை புனரமைப்பு

*154 வினா.—திரு. கரு. சீமைச்சாமி :
திரு. எஸ். ஜே. ராமசாமி:
திரு. கே. விநாயகம் : } மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் உள்ள சமுதாய நல அபிவிருத்தி இலாகா சீரமைக்க வேண்டிய ஏற்பாடுகள் நடக்கிறதா ?

(இ) ஆம் என்றால் ; அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) : இந்த விஷயம் அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

*155 *Q.*—Thiru K. VINAYAKAM :
Thiru S. J. RAMASWAMY : } Will the Hon. the Minister for Local Administration be please to state—

(*a*) whether the Special Adviser to the Madras Chief Minister who was deputed to study the working of Community Development Projects in Madhya Pradesh, has submitted his report ; and

(*b*) if so, what are his findings ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

பஞ்சாயத்து ஒன்றிப்பு மன்றங்கள்

* 156 வினா.—திரு. க. ர. நல்லசிவன் : மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து ஒருங்கிணைப்பு மன்றங்கள் தற்போது செய்துவரும் அபிவிருத்தி வேலைகளை நிறுத்திவைக்குமாறு மாநில அரசு தாக்கீது ஏதேனும் அனுப்பியுள்ளதா ?

(இ) ஆமெனில், இதன் மூலம் மாநில அரசுக்கு மீதமாகும் தொகை யாது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

Thiru. K. VINAYAKAM ; Sir, will the Government be pleased to place a copy of the recommendations of the Special Officer who went to Madhya Pradesh to examine this issue, on the table of the House and also what are the salient features of that report ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மத்தியப் பிரதேசத்திற்கு அனுப்பப்பட்ட தனி அதிகாரி தன் அறிக்கையை சர்க்காருக்குக் கொடுத்திருக்கிறார்கள். அரசு அதைப் பரிசீலித்து வருகிறது. அதைப்பற்றி எல்லாக் கட்சித் தலைவர்களையும் கலந்து ஆலோசிக்கப்படும் என்று முன்பே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அப்படிச் கூடிப் பேசிய பிறகு அவசியமானால், அந்த அறிக்கை கொடுக்கப்படலாம்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, அதைப்பற்றிச் சில நிமிடங்களுக்கு முன்னால்தான் நான் எதிர்க் கட்சித் தலைவருடன் பேசிக்கொண்டிருந்தேன். தலைவருடன் உறுப்பினர் பேசிக்